<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் திரு. ஜெயச்சந்திரன் | வயது | : | 56 |
| தந்தை/கணவர் பெயர் | : | பரமசிவம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.1.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பண்ருட்டி அரசு மருத்துவமனையில் மூத்த குடிமை மருத்துவராக பணிபுரிந்து கடந்த 2022 அன்று விருப்ப ஓய்வில் சென்றுவிட்டேன். தற்போது தனியார் மருத்துவமனையில் நெய்வேலியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2011 அன்று கடலூர் மத்திய சிறை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றிய போது அதிகாலை 02.00 மணியளவில் கடலூர் மத்திய சிறை கட்டுப்பாட்டு அறையிலிருந்து தொலைபேசி மூலம் சுரேஷ் த/பெ. முத்து கிருஷ்ணன் சிறை வாசி எண் RB 1648 என்பவரை பரிசோதிக்க அழைத்தார்கள். உடனடியாக நான் மத்திய சிறைக்கு சென்றேன். அங்கே சுரேஷ் த/பெ. முத்து கிருஷ்ணன் என்பவரை பரிசோதனை செய்த போது பின்வரும் காயங்கள் காணப்பட்டது.

1.இரண்டு புட்டங்களிலும் கன்னிய காயங்கள் காணப்பட்டன.

2. இரண்டு தொடையின் பின்புறம் கன்னிய காயம் காணப்பட்டன.

3.வலது காலின் மேல்புறம் கன்னிய காயம் காணப்பட்டது.

4.இரண்டு தோள்பட்டையின் பின்புறம் கன்னிய காயம் காணப்பட்டன.

மேற்சொன்ன காயங்கள் இருந்த காரணத்தினால் சிறையில் அனுமதிக்க தகுதியற்றவர் என்று கருதி எங்களுடைய மருத்துவ ஜெர்னல் புத்தகத்தில் பதிவு செய்து சுரேஷ் த/பெ. முத்து கிருஷ்ணன் என்பவருக்கு சிகிச்சை வழங்க வேண்டி கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு அதே வழிக்காவலர்கள் மூலம் அனுப்பி வைக்க பரிந்துரை செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றிதழ் நகல் நான் வழங்கியதுதான். அதிலுள்ளது என் கையொப்பம் தான். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ. 12** மேற்படி காயங்கள் மேற்சொன்ன தேதியில் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு. அவர் தனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை. அவர் அந்த நேரத்தில் நல்ல நிலையில் தான் இருந்தார்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சுரேஷ் என்பவருக்கு மேற்படி வீக்க காயங்கள் எப்போது யாரால் எங்கு ஏற்பட்டது என்று கேட்டு பதிவு செய்யவில்லை. வீக்க காயங்களுடைய வயதினை குறிப்பிடவில்லை. மேற்படி அ.சா.ஆ.12 ல் குறிப்பிட்டுள்ள வீக்க காயங்களை அணிந்திருக்கும் சட்டையை கழட்டினால் தான் பார்க்க முடியும் என்றால் ஆமாம். 23.06.2026 ல் தான் அ.சா.ஆ.12 நகல் எடுத்து அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

பொதுவாக ஜெயில் முதல் என்டரன்சில் பரிசோதனை செய்து அ.சா.ஆ..12 வழங்கப்பட்டது. IN and Out Register இருக்கும் என்றால் ஆமாம். அதில் உள்ளே வருபவர்கள், வெளியே செல்பவர்கள் பெயர் குறிப்பிட்டிருக்கும் என்றால் ஆமாம். ஜெயிலர் மற்றும் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்ப சொல்லி பரிந்துரை கடிதம் கொடுத்தேன்.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார் )**

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 111/2021

அரசுதரப்பு 4 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் திரு. பாலகுமரன் | வயது | : | 50 |
| தந்தை/கணவர் பெயர் | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.1.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2011 அன்று நான் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்த போது கடலூர் நீதித்துறை நடுவர் எண் 2, அவர்களின் வேண்டுகோள் கடிதம் 3.00 மணிக்கு பெறப்பட்டது. சுரேஷ் வயது 41 த.பெ. முத்துகிருஷ்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது கடலூர் புதுநகர் காவல் நிலைய தலைமை காவலர் 887 முருகவேல் அவர்கள் அடையாளம் காண்பிக்க சக மருத்துவர் திரு.ரமேஷ் என்பவருடன் சேர்ந்து உடற்கூறாய்வினை 3.10 மணிக்கு துவங்கினோம். உடல் குளிர்ந்து காணப்பட்டது. நான்கு அவயங்களிலும் மரண விரைப்பு இருந்தது. அவர் நல்ல திரேக வாகுடன் இருந்தார். அவரது முடியின் நிறம் கருத்து காணப்பட்டது.

நன்கு வளர்ந்த தாடி இருந்தது. அவருடைய வலது முழுங்கையில் மருத்துவ முறையில் ஊசி செலுத்தியதற்கான பச்சை நிற ஊசி இருந்தது. அவர் உடலில் பின்வரும் காயங்கள் காணப்பட்டன.

1. 3 சிராயப்பு காயங்கள் 0.5 x 1 CM அளவில் வலது கால் முட்டியின் கீழ் கருத்த நிறத்தில் இருந்தன.

2. 1x 1 CM அளவில் வலது முழங்கை முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. இடது புட்டத்தில் 4 சிராயப்பு காயங்கள் சுமார் 2x 2.5 CM அளவில் கருத்து காணப்பட்டன.

4. 3.5x 2 CM அளவில் 2 சிராயப்பு காயங்களும் 2x 2 CM அளவில் 1 சிராய்ப்பு காயமும் வலது புட்டத்தில் கருத்து காணப்பட்டன.

5. வலது தோள்பட்டையில் 6x 4 CM அளவில் கன்னிய காயம் இருந்தது மற்றும் இடது தோள்பட்டையில் 7x 8 CM அளவில் கன்னிய காயம் இருந்தது.

6. 2x 2.5 CM அளவிலும் 0.5x 0.5 CM அளவிலும் இரண்டு சிராய்ப்பு காயங்கள் வலது தோள்பட்டையில் காணப்பட்டது. மேலும் 2 CM அளவில் கோடு போன்ற சிராய்ப்புகள் வலது தோள்பட்டையில் பல காணப்பட்டன.

7. 4.5 x 2 CM அளவிலும் 1.5 x 3.5 CM அளவிலும் சிராய்ப்பு காயம் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

8. இடது முதுகு பகுதியில் 7 x 2 CM அளவில் கருத்த நிறத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. மேலும் 4 x 0.5 CM அளவில் மற்றும் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.

9. 4x 5 CM வலது தொடையில் கன்னிய காயம் காணப்பட்டது.

10. வலது கால் முட்டியில் 2x 1 CM அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

11. இடது கால் முட்டியில் 1 x 0.5 CM அளவில் சிராய்ப்பு காயம் கருத்து காணப்பட்டது.

மேற்படி அனைத்து காயங்களும் இறப்பிற்கு முன் ஏற்பட்டவை. கண்கள் மூடியிருந்தன. நாசியில் எந்த திரவமும் வடியவில்லை. வாய் மூடி நாக்கு உள்ளே இருந்தது. தாடை இருகி இருந்தது. காதுகளில் எந்த திரவமும் கசியவில்லை. வயிறு வீங்கி இருந்தது. விலா எலும்புகள் சாதாரணமாக காணப்பட்டன. உடல் உள்புற ஆய்வில் இடது பக்க நெஞ்சு பகுதியில் தசைகள் கசிந்து காணப்பட்து. இருதயம் கசிந்து இருந்தது. இருதயத்தில் மேல் முன் பரப்பில் வெளிர்ந்த பகுதி காணப்பட்டது. இருதய நாளங்கள் தடித்துஇருந்தன. அவரது குரல்வளை எலும்பு சேகரிக்கப்பட்டு எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்பட்டது. அவரது இரைப்பை, கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் கசிந்து காணப்பட்டன. சிறுகுடல், பெருங்குடல் கசிந்து காணப்பட்டது. பெருங்குடலில் மலம்இருந்தது. சிறுநீர் பை காலியாகஇருந்தது. தலை கபாலம் சாதாரணமாக காணப்பட்டது. மூளை கசிந்து இருந்தது.

எந்த ஒரு பெரிய எலும்புகளிலும் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. அவர் தண்டுவடம் சாதாரணமாக காணப்பட்டது. அவரது உடல் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு அனுப்பப்பட்டது. விழுப்புரம் தடய அறிவியல் துறை H.No.185/11 ,Dt 23.03.2011 தேதியிட்ட அறிக்கையின் படி உடல் உறுப்புகளில் மதுவோ, வேறு விஷ பொருட்களோ காணப்படவில்லை. செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் VC No138/2011, dated 19.03.2011 தேதியிட்ட அறிக்கையின் படி கழுத்து குறுத்தெலும்பு சாதாரணமாக இருந்தது.

**இறுதி கருத்துரை–** மேற்படி நபர் உடலில் ஏற்பட்ட பலத்தரப்பட்ட காயங்களினாலும், அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பால் இறந்திருக்க கூடும் என்றும் உடற்கூறாய்விற்கு 20 முதல் 30 மணிநேரம் முன்பாக இறந்திருக்க கூடும் என்றும் கருத்துரை வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பிரேத கூறாய்வு அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை நான் வழங்கியது தான்.

**2, 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

சுரேஷ் இறப்பதற்கு முன்பு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் விவரங்கள், ஆவணங்கள் என்னிடம் அவர் சிகிச்சையில் இருந்தார் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டது, ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை. சிராய்ப்பு காயங்களை பொருத்தவரையில் அதன் வயதினை குறிப்பிட்டு சொல்ல வில்லை, ஆனால் இறப்பிற்கு முன்பு ஏற்பட்டது. எத்தனை நாட்களுக்கு முன்பு என்று தெரியவில்லை. ஆல்கஹால் வித்ராயல் சிகிச்சை வழங்கும் போது வலிப்பு வருவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் ஆமாம்.

மாரடைப்பு என்று குறிப்பிட்டுள்ளது Bio Cardiac infections என்றால் ஆமாம். இதயம் சிறு பகுதி தடித்து காணப்பட்டால் Bio Cardiac infections காணப்படும் என்றால் இருதயத்தின் ரத்த ஓட்டம் தடைப்பால் Bio Cardiac infections ஏற்பட வாய்ப்பு உண்டு. குடிப்பழக்கம், சிகெரெட் புகைப்பவர்களுக்கு இருதயம் தடித்து இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சிராய்ப்பு காயங்களினால் இறப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். தோள்பட்டையில் ஏற்பட்ட கன்னிய காயத்தினால் மட்டும் இறப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். இருதயம் வீங்கி காணப்படவில்லை, வெளிர்ந்து காணப்பட்டது. இறந்தவர் வலிப்பு வந்து கீழே விழும் போது மேற்படி சிராயப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (மேற்படி குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார் )**